[2023] 4 S.C.R. 858

இந்திய உச்ச நீதிமன்றம்

ஏப்ரல் 18, 2023

மாண்புமிகு நீதியரசர் திரு.பி.ஆர்.கவை

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு.அரவிந்த் குமார்

(உரிமையியல் மேல்முறையீடு எண்.2924 /2023)

பஞ்சாப் மற்றும் சிந்து வங்கி - மேல்முறையீட்டாளர்

எதிர்

ப்ரண்ட்லைன் கார்ப்பரேஷன் லிமிடெட் -எதிர் மேல்முறையீட்டாளர்

நிதிச்சொத்துக்களின் பாதுகாப்பு மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டி சட்டம், 2002 – பிரிவு 34 -எதிர்மேல்முறையீட்டாளர் வழக்கு சொத்தின் தரைத்தளத்தில் முந்தைய உரிமையாளரால் இம்மேல்முறையீட்டாளர் - வங்கி வாடகைத்தாரராக அனுமதிக்கப்பட்டிருந்தார். அந்த சொத்தை எதிர்மேல்முறையீட்டாளர் கிரையம் வாங்கியுள்ளார் - வழக்குச் சொத்தை இம்மேல்முறையீட்டாளர் - வங்கியிடம் அடைமானம் வைத்து ரூ.42.74 கோடி மதிப்புள்ள பல்வேறு கடன் வசதிகளை எதிர்மேல்முறையீட்டாளர் பெற்றுள்ளார் - அதன்பிறகு, 29.11.2010 தேதியிட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று நகர உரிமையியல் நீதிமன்றத்தில் முந்தைய உரிமையாளரால் தாக்கல்

செய்யப்பட்ட வெளியேற்றுகை வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது மற்றும் 11.02.2011 தேதியிட்ட குத்தகை ஒப்பந்தம் இருதரப்பினருக்கிடையே ஏற்படுத்தப்பட்டுள்ளது - நிதிமுறை தவறுகள் எதிர்மேல்முறையீட்டாளரால் செய்யப்பட்டுள்ளது - சர்பாசி சட்டம் பிரிவு 13 ன் கீழ் கேட்பு அறிவிப்பு ஒன்று மேல்முறையீட்டாளர் - வங்கியால் வழங்கப்பட்டுள்ளது - கோரிக்கை நிறைவேறவில்லை - மேல்முறையீட்டாளர் வழக்குச் சொத்தை தனது உடைமையில் எடுத்துக்கொண்டதாக அறிவித்தது - எதிர்மேல்முறையீட்டாளர் டிஆர்டி முன்பாக பத்திரமயமாக்கல் விண்ணப்பம் தாக்கல் செய்துள்ளார் மற்றும் உயர்நீதிமன்றத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் குத்தகை ஒப்பந்த ஏற்றுகை ஆற்றுதல் பரிகாரத்திற்காக ஒரு அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார் - வழக்கு சொத்தின் எந்தவொரு பகுதியையும் விற்பனை செய்வதிலிருந்து மேல்முறையீட்டாளரை தடை செய்யவேண்டும் என்று இடைக்கால தடை உத்தரவு விண்ணப்பமும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது - உயர்நீதிமன்ற தனித்தமர்வு நீதிபதி விற்பனை குறித்து இறுதி உத்தரவுகள் பிறப்பிக்கக்கூடாது என்று ஒரு இடைக்கால தடை உத்தரவு வழங்கியுள்ளார் மற்றும் அது அவ்வப்போது நீடிக்கப்பட்டுள்ளது - அதன் பிறகு, தனித்தமர் நீதிபதி தனது உத்தரவின் மூலம் இடைக்கால உத்தரவை நீக்கரவு செய்துள்ளார்- அதில், மேல்முறையீட்டாளர் பிணை கடனாளராக இருப்பதால் வழக்குச் சொத்து சம்பந்தமாக தகுந்த நடவடிக்கைகள் எடுப்பதிலிருந்து தடை செய்ய இயலாது என்றும் குறிப்பாக, சர்பாசி சட்டம் பிரிவு 34 ன் கீழ் உரிமையியல் நீதிமன்றத்திற்கு அதிகாரவரம்பு இல்லை - ஈராயம் தனித்தமர் நீதிபதியின் உத்தரவினை ரத்து செய்து சர்பாசி சட்டம் பிரிவு 34 ன் படி ஒட்டுமொத்த தடையில்லை என்றும் தரப்பினர்களின் உரிமைகளை இறுதியாக தீர்மானிக்கும் வரை வழக்கு சொத்தை மேல்முறையீட்டாளர்

விற்கக்கூடாது என்று தடை விதித்தது - மேல்முறையீட்டில், பின்வருமாறு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது - எந்த ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் " அல்லது அச்சட்டத்தில் அளித்துள்ள ஏதேனும் அதிகாரத்தின் படி எடுக்கப்படும்" என்று தீர்மானிப்பதற்கு ஒரு டிஆர்டி அல்லது மேல்முறையீட்டு தீர்ப்பாயத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்ட விஷயங்களில் உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு தடைசெய்யப்பட்டுள்ளது என்று நிறுவப்பட்டுள்ளது - இந்த சட்டத்தின் கீழ் வழங்கப்படும் எந்த அதிகாரமும் பிரிவு 13 இன் உட்பிரிவு (4) இன் கீழ் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றாலும், டிஆர்டி-யால் விசாரிக்கக்கூடிய விஷயங்களைக் கூட தடை உள்ளடக்கியது என்று நீதிமன்றம் கூறியுள்ளது - எந்தவொரு விஷயத்திலும் நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், உரிமையியல் நீதிமன்றத்திற்கு அதன் எந்த நடவடிக்கையையும் நடத்த அதிகாரம் இல்லை என்று திட்டவட்டமாக பகரப்பட்டுள்ளது - சர்பாசி சட்டத்தின் பிரிவு 13 இன் உட்பிரிவு (4) இன் கீழ் ஏற்கனவே எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தவிர, டிஆர்டி-யால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளக்கூடிய அனைத்து விஷயங்களுக்கும் உரிமையியல் நீதிமன்றத்தின் தடை பொருந்தும் என்று இந்நீதிமன்றம் தீர்ப்புரைத்துள்ளது - இந்நீதிமன்றம் மேலும், உரிமையியல் நீதிமன்றத்தின் மிகக் குறைந்த அளவிலான அதிகார வரம்பையும் செயல்படுத்த முடியும் என்று கூறியுள்ளது - உதாரணமாக, பாதுகாக்கப்பட்ட கடனாளியின் நடவடிக்கை மோசடியானது அல்லது அவரது கூற்று மிகவும் அபத்தமானது மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாததாக இருக்கலாம், இதற்கு எந்த விசாரணையும் தேவையில்லை - இவ்வழக்கில், பிணைக் கடனாளியின் நடவடிக்கை, அதாவது மேல்முறையீட்டாளரின் நடவடிக்கை மோசடியானது அல்லது அதன் கூற்று மிகவும் அபத்தமானது அல்லது ஏற்றுக்கொள்ள

முடியாதது என்றும் இதற்கு எந்த விசாரணையும் தேவையில்லை என்று கூறிவிட முடியாது - தனித்தமர்வு நீதிபதியின் விருப்புரிமை அதிகாரத்தில் குறுக்கீடு செய்வதில் ஈராயம் பெரும் தவறு செய்துள்ளதாக நாங்கள் கருதுகிறோம் - முடிவில், இம்மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது - கற்றறிந்த தனித்தமர்வு நீதிபதி வழங்கிய தீர்ப்பு மற்றும் உத்தரவு உறுதி செய்யப்படுகிறது.

மேல்முறையீட்டை அனுமதித்து, இந்நீதிமன்றம் பின்வருமாறு தீர்ப்பளிக்கிறது.

1. மாண்புமிகு .உச்சநீதிமன்றம் மார்டியா கெமிக்கல்ஸ் லிமிடெட் மற்றும் மற்றவர்கள் எதிர் இந்திய ஒன்றியம் மற்றும் பிறர் என்ற வழக்கில் எந்த ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் " அல்லது அச்சட்டத்தில் அளித்துள்ள ஏதேனும் அதிகாரத்தின் படி எடுக்கப்படும்" என்று தீர்மானிப்பதற்கு ஒரு டிஆர்டி அல்லது மேல்முறையீட்டு தீர்ப்பாயத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்ட விஷயங்களில் உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு தடைசெய்யப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கூறியிருப்பதைக் காணலாம். இந்த சட்டத்தின் கீழ் வழங்கப்படும் எந்த அதிகாரமும் பிரிவு 13 இன் உட்பிரிவு (4) இன் கீழ் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றாலும், டிஆர்டி-யால் விசாரிக்கக்கூடிய விஷயங்களைக் கூட தடை உள்ளடக்கியது என்று நீதிமன்றம் கூறியுள்ளது. சர்பாசி சட்டத்தின் தீர்ப்பாயத்திற்கு எடுத்துச் செல்லக்கூடிய ஒரு வழக்கைப் பொறுத்தமட்டில் அதிகார வரம்பு தடை உள்ளது என்று கூறப்பட்டுள்ளது. எந்தவொரு விஷயத்திலும் நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், உரிமையியல் நீதிமன்றத்திற்கு அதன் எந்த நடவடிக்கையையும் நடத்த அதிகாரம் இல்லை என்று திட்டவட்டமாக பகரப்பட்டுள்ளது. சர்பாசி சட்டத்தின் பிரிவு 13 இன் உட்பிரிவு (4) இன் கீழ் ஏற்கனவே

எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தவிர, டிஆர்டி-யால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளக்கூடிய அனைத்து விஷயங்களுக்கும் உரிமையியல் நீதிமன்றத்தின் தடை பொருந்தும் என்று இந்நீதிமன்றம் தீர்ப்புரைத்துள்ளது. (பத்தி 13)

2. இந்நீதிமன்றம் மேலும், உரிமையியல் நீதிமன்றத்தின் மிகக் குறைந்த அளவிலான அதிகார வரம்பையும் செயல்படுத்த முடியும் என்று கூறியுள்ளது. உதாரணமாக, பாதுகாக்கப்பட்ட கடனாளியின் நடவடிக்கை மோசடியானது அல்லது அவரது கூற்று மிகவும் அபத்தமானது மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாததாக இருக்கலாம், இதற்கு எந்த விசாரணையும் தேவையில்லை அல்லது துல்லியமாக சொல்ல வேண்டுமெனில் ஆங்கில அடைமான வழக்குகளில் உரிமையியல் நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்க அனுமதிக்கப்படும் அளவிற்கு இருக்கவேண்டும்.(பத்தி 14)

3. இவ்வழக்கில், பிணைக் கடனாளியின் நடவடிக்கை, அதாவது மேல்முறையீட்டாளரின் நடவடிக்கை மோசடியானது அல்லது அதன் கூற்று மிகவும் அபத்தமானது அல்லது ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும் இதற்கு எந்த விசாரணையும் தேவையில்லை என்று கூறிவிட முடியாது. பிரிவு 17 மற்றும் 18 ன் விதிகளின் படி சர்பாசி சட்டமே பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு தீர்வுகளை வழங்குகிறது என்பது மேலும் கவனிக்கத்தக்கது. (பாரா 15)

4. இந்நீதிமன்றம் வாண்டர் லிமிடெட் மற்றும் மற்றொருவர் எதிர் ஆன்டாக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் [1990 (supp) SCC 727] என்ற வழக்கில் மேல்முறையீட்டு

நீதிமன்றம், தன்னிச்சையாக அல்லது ஏறுமாறாக அல்லது நெறிபிறழ்ந்து செயல்பட்டதாக அல்லது இடைக்காலத் தடை உத்தரவுகளை வழங்குதல் அல்லது மறுத்தல் ஆகியவற்றை நெறிமுறைப்படுத்தும் நன்கு நிறுவப்பட்ட சட்டத்தின் கொள்கைகளை அந்நீதிமன்றம் புறக்கணித்ததாக காட்டப்பட்டால் தவிர முதல் நிலை நீதிமன்றத்தின் விருப்புரிமையைப் பயன்படுத்துவதில் தலையிடாது மற்றும் அதன் சொந்த விருப்பத்தைப் பதிலீடு செய்து மாற்றாது. விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு எதிரான மேல்முறையீடு கொள்கை அடிப்படையிலான மேல்முறையீடு என்று கூறப்படுகிறது. மேலும், மேல்முறையீட்டு நீதிமன்றம் சான்றுகளை மறுமதிப்பீடு செய்யாது, மேலும், அந்த நீதிமன்றத்தால் எட்டப்பட்ட முடிவு நியாயமான முறையில் முக்கியச் சான்றுகளின் அடிப்படையில் சாத்தியமானதாக இருந்தால், கீழமை நீதிமன்றத்தால் எட்டப்பட்ட முடிவை விட வேறுபட்ட முடிவை அடைய முற்படாது என்று தீர்ப்பளித்துள்ளது. விசாரணை நீதிமன்றம் தன் விருப்புரிமை அதிகாரத்தை நியாயமான முறையில் மற்றும் சட்டப்படி பயன்படுத்தியிருந்தால், மேல்முறையீட்டு நீதிமன்றம் வேறுபட்ட கருத்தை எடுத்திருக்கும் பட்சத்தில் விசாரணை நீதிமன்றத்தின் விருப்புரிமை பயன்படுத்துவதில் தலையிடுவதை நியாயப்படுத்தாது என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (பத்தி 17)

5. சந்தேகத்திற்கு இடமின்றி, இவ்வழக்கில், ஜூலை 15, 2013 தேதியிட்ட இடைக்கால நிவாரணத்தை ரத்து செய்யும்போது, தனித்தமர்வு நீதிபதி, சர்பாசி சட்டம் பிரிவு 34 இன் விதிகளின் படி வாதியால் கோரப்பட்ட பரிகாரம் வழங்கப்பட்டிருக்க முடியாது என்று தீர்ப்பளித்துள்ளார். எனவே, சட்டரீதியான தடையின் அடிப்படையில் தனி நீதிபதி அவ்வுத்தரவைப் பிறப்பித்துள்ளார். மார்டியா கெமிக்கல்ஸ் லிமிடெட்(மேலே) என்ற

வழக்கில் இந்நீதிமன்றத்தால் முன்பு பகர்ந்தபடி, ஒரு உரிமையியல் வழக்கு நிலைநிற்கத்தக்கதற்கான நோக்கம் மிகவும் குறுகியது. எதிர்மேல்முறையீட்டாளர் / வாதியின் வழக்கு மேற்குறிப்பிட்ட எல்லைக்குள் வராது. எனவே, தனித்தமர்வு நீதிபதியின் விருப்புரிமை அதிகாரத்தில் குறுக்கீடு செய்வதில் நீதியராயம் பெரும் தவறு செய்துள்ளதாக நாங்கள் கருதுகிறோம். (பத்தி 18)

மார்டியா கெமிக்கல்ஸ் லிமிடெட் மற்றும் மற்றவர்கள் எதிர் யூனியன் ஆஃப் இந்தியா மற்றும் பிறர் (2004) 4 எஸ்.சி.சி 311 : [2004] 3 எஸ்.சி.ஆர் 982 ;

வாண்டர் லிமிடெட் மற்றும் மற்றொருவர் எதிர் ஆன்டாக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் [1990 (supp)எஸ்.சி.சி727]

துணைக்கொள்ளப்பட்ட முன்தீர்ப்பு

[2004] 3 எஸ்.சி.ஆர்.982 சார்பு பத்தி 12

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு: உரிமையியல் மேல்முறையீடு எண்.2924 /2023

இந்த வழக்கானது APOT எண். 411/2016 ல் 30.01.2017 அன்று கல்கத்தா உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பு மற்றும் உத்தரவின் அடிப்படையில் எழுந்ததாகும்.

ஆஷிம் பானர்ஜி , மூத்த வழக்கறிஞர், செல்வி. டினா கார்க், மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர்

கரன் பதுரா , எதிர்மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர்

தீர்ப்புரை

நீதியரசர். திரு.பி.ஆர்.கவய் அவர்களால் தீர்ப்பு பகரப்பட்டது.

1. சிறப்பு அனுமதி வழங்கப்பட்டது.

2. இம்மேல்முறையீடானது, மாண்புமிகு. கொல்கத்தா உயர்நீதிமன்றத்தின் ஈராயம் (இனி "உயர்நீதிமன்றம்" என்று குறிப்பிடப்படுகிறது) ஜனவரி 30, 2017 தேதியில், A.P.O.T.No.411/2016 ல் வழங்கிய தீர்ப்பு மற்றும் உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன்மூலம், நீதியராயம் வழங்கிய நவம்பர் 2, 2016 அன்று தனித்தமர்வு நீதிபதி பிறப்பித்த உத்தரவை நீக்கரவு செய்துள்ளது. மேற்படி நீக்கரவு உத்தரவின் மூலம், மேல்முறையீட்டாளரை வழக்கு சொத்தை விற்பனை செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளும்படியும் ஆனால், விற்பனை குறித்து இறுதி உத்தரவு பிறப்பிக்கவேண்டாம் என்ற ஜூலை 15, 2013 தேதியிட்ட தனித்தமர்வு நீதிபதியின் முந்தைய இடைக்கால உத்தரவு ரத்து செய்யப்பட்டது.

3. இம்மேல்முறையீட்டிற்கு வழிவகுக்கும் பொருண்மைகள் சுருக்கமாக பின்வருமாறு.

3.1.. மேல்முறையீட்டாளர் - பஞ்சாப் மற்றும் சிந்து வங்கி, 1972 ம் ஆண்டு தி/ள்.பாரத் சேம்பர் ஆப் காமர்ஸ் மூலம் 700 001, கொல்கத்தா, பழைய நீதிமன்ற வளாகத் தெரு, வளாக எண்.8, தற்போது 700 001, கொல்கத்தா, ஹேமந்த்பாசு சரணி, எண்.28 என்று அறியப்படும்

வளாகத்தில் (இனி "வழக்கு சொத்து" என்று குறிப்பிடப்படுகிறது) கீழ்தளத்தில் வாடகைத்தாரராக அனுமதிக்கப்பட்டார். 2003-ம் ஆண்டு, தி/ள்.பாரத் சேம்பர் ஆப் காமர்ஸ் இம்மேல்முறையீட்டாளருக்கு எதிராக கல்கத்தா நகர உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண்.2/2003 என்ற வெளியேற்றுகை வழக்கைத் தாக்கல் செய்தது.

3.2. மேற்கூறிய வெளியேற்றுகை வழக்கு நிலுவையில் இருந்தபோது, எதிர்மேல்முறையீட்டாளர் தி/ள். பிரண்ட்லைன் கார்ப்பரேஷன் லிமிடெட் இவ்வழக்கு சொத்தை 2005, பிப்ரவரி 17 என்று தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் மூலம் தி/ள்.பாரத் சேம்பர் ஆப் காமர்ஸ் என்ற நிறுவனத்திடமிருந்து வாங்கியது. அதன்பின், இவ்வழக்கு சொத்தை அடைமானம் வைத்து சுமார் ரூ.42.74 கோடி மதிப்புள்ள பல்வேறு கடன் வசதிகளை இம்மேல்முறையீட்டாளரிடமிருந்து எதிர்மேல்முறையீட்டாளர் பெற்றுள்ளார்.

3.3. பின்னர், கொல்கத்தா நகர உரிமையியல் நீதிமன்றத்தில் மேற்கூறிய வெளியேற்றுகை வழக்கில், 2010, நவம்பர் 29 ம் தேதி ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் 2011, பிப்ரவரி 11-ம் தேதியன்று இரு தரப்பினர்களுக்கிடையே ஒரு குத்தகை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. அதன்படி, இவ்வழக்குச் சொத்து 21 வருடங்களுக்கு இம்மேல்முறையீட்டாளருக்கு கொடுக்கப்பட்டுள்ளது. கொல்கத்தா, நகர உரிமையியல் நீதிமன்றத்தால் இசைவு தீர்ப்பாணை எதுவும் உண்மையில் நிறைவேற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

3.4. எதிர்மேல்முறையீட்டாளர் செய்த நிதி தவறுகள் காரணமாக

இவ்வெதிர்மேல்முறையீட்டாளரால் பெறப்பட்ட கடன்கள் அனைத்தும் கடந்த 2012, மார்ச் 31 ம் தேதி இம்மேல்முறையீட்டாளரால் வேறுவழியின்றி வாராக்கடன்களாக (சுருக்கமாக 'என்.பி.ஏ') வகைப்படுத்தப்பட்டது. அதன்பின்னர், உடனடியாக நிலுவைத்தொகை சுமார் ரூ.44.89 கோடி, வட்டியுடன் சேர்த்து, எதிர்மேல்முறையீட்டாளரிடமிருந்து வசூலிப்பதற்காக கடந்த 2012 ஜூன் 13 ம் தேதி நிதிச்சொத்துக்களின் பாதுகாப்பு மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டி சட்டம், 2002 (இனி 'சர்பாசி சட்டம் ' என்று குறிப்பிடப்படுகிறது) பிரிவு 13 உட்பிரிவு (2) ன் கீழ் ஒரு கேட்பு அறிவிப்பும் இம்மேல்முறையீட்டாளரால் அனுப்பப்பட்டுள்ளது. கோரிக்கை நிறைவேற்றப்படாததால், வழக்குச் சொத்தை தனது உடைமையில் எடுத்துக்கொண்டதாக சர்பாசி சட்டம், பிரிவு 13, உட்பிரிவு (14) ன் கீழ் ஒரு உடைமை அறிவிப்பை இம்மேல்முறையீட்டாளர் வெளியிட்டார்.

3.5. இதனால் பாதிக்கப்பட்டு, எதிர்மேல்முறையீட்டாளர், கொல்கத்தா, கற்றறிந்த கடன் மீட்பு தீர்ப்பாயம்-I ன் முன்பாக (சுருக்கமாக "டி.ஆர்.டி." என்று குறிப்பிடப்படுகிறது) இரண்டாம் மேல்முறையீட்டு வழக்கு எண். 19/2023-பத்திரமயமாக்கல் விண்ணப்பம் தாக்கல் செய்துள்ளார். அதே நேரத்தில், இரு தரப்பினர்களுக்கிடையே ஏற்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்ட குத்தகை ஒப்பந்தத்தையும், குறித்தவகை பரிகாரத்திற்காக மாண்புமிகு. உயர்நீதிமன்றத்தில் C.S.எண். 217/2013 என்ற ஒரு உரிமையியல் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது. அதில், இருதரப்பினர்களுக்கிடையே ஏற்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் மேற்படி புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் விதிகளின்படி, மேல்முறையீட்டாளர் அவரது ஒரு பகுதி கடப்பாட்டினை நிறைவேற்றுவது வழக்குச் சொத்திலிருந்து தற்காலிகமாக

மேல்முறையீட்டாளர் வெளியேறுவதையும், அதன்மூலம் வழக்குச் சொத்தை எதிர்மேல்முறையீட்டாளர் மறு கட்டமைப்பு செய்வதற்கு வழிவகை செய்வதுமட்டுமல்லாமல் மீண்டும் வழக்குச் சொத்தின் தரைத்தளத்தை மேல்முறையீட்டாளரின் சுவாதீனத்தில் ஒப்படைக்கவும், புதியதாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் மூன்றாம் நபருக்கு உரிமை நலன்களை உருவாக்குவதன் மூலம் கிடைக்கப்பெறும் தொகையிலிருந்து நிலுவைத்தொகையை சரிசெய்து கொள்ள உதவும் என்று எதிர்மேல்முறையீட்டாளர் கோரினார். வழக்குச் சொத்தினைப் பொறுத்து அதன் ஏதாவதொரு பகுதியைக் கூட விற்பனை செய்யவோ அல்லது அதில் வில்லங்கம் ஏற்படுத்தவோ எந்தவொரு நடவடிக்கையும் மேல்முறையீட்டாளர் எடுக்கக்கூடாதென்று தடை உத்தரவு கோரி G.A.No.1884/2013 என்ற ஒரு தடை உத்தரவு மனுவும் எதிர்மேல்முறையீட்டாளரால் முன்னிடப்பட்டது.

3.6. கற்றறிந்த தனித்தமர் நீதிபதி அவர்கள் 2013 ஜூலை 15 ம் தேதி பிறப்பித்த இடைக்கால உத்தரவின் மூலம் மேற்கூறிய மனுவினை அனுமதித்து ஆறு வார காலத்திற்கு இறுதி விற்பனை குறித்து உத்தரவுகள் எதுவும் பிறப்பிக்கக்கூடாது என்று உத்தரவிட்டுள்ளார். இந்த இடைக்கால உத்தரவு அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு, இறுதியாக டிசம்பர் 2, 2013 அன்று உத்தரவு மூலம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

3.7. வெளியேற்றுகை வழக்கு நிராகரிக்கப்பட்டிருப்பதாகவும், தரப்பினர்களுக்கிடையே ஏற்பட்டதாகக் கூறப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தம் இசைவுத் தீர்ப்பாணையாக உருக்கொள்ளவில்லை என்றும் வாதிட்டு மேற்கூறிய இடைக்கால

உத்தரவை நீக்கரவு செய்வதற்காக G.A. எண்.2352/2014 என்ற மனுவினை மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்துள்ளார். மேற்படி தனித்தமர் நீதிபதி தனது 2016 நவம்பர் 2 ம் தேதிய உத்தரவின் மூலம் 2013, ஜுலை 15-ம் தேதிய மேற்கூறிய இடைக்கால உத்தரவை நீக்கரவு செய்துள்ளார். அதில், மேல்முறையீட்டாளர் பிணை கடனாளராக இருப்பதால் வழக்குச் சொத்து சம்பந்தமாக தகுந்த நடவடிக்கைகள் எடுப்பதிலிருந்து தடை செய்ய இயலாது என்றும் குறிப்பாக, சர்பாசி சட்டம் பிரிவு 34 ன் கீழ் உரிமையியல் நீதிமன்றத்திற்கு அதிகாரவரையறை இல்லை என்று வெளிப்படையாக தடை உள்ளதன் அடிப்படையில் இடைக்கால உத்தரவு நீக்கரவு செய்யப்பட்டுள்ளது. செலவுத் தொகையாக ரூ.5,00,000/- செலுத்த வேண்டுமென்று எதிர்மேல்முறையீட்டாளருக்கு உத்தரவிடப்பட்டது.

3.8. இதனால், மனக்குறைவுற்று, மாண்புமிகு. உயர்நீதிமன்றம், ஈராயம் முன்பு A.P.O.T. No. 411/2016-ல் தடை உத்தரவிற்கான G.A.No. 3535/2016 மனுவுடன் மேற்கூறிய உத்தரவை எதிர்த்து எதிர்மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்துள்ளார்.

3.9. எதிர்மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட பிணையத்திற்கான மனுவில் டி.ஆர்.டி தனது 2013, ஆகஸ்ட் 7 வது நாள் உத்தரவில் மாண்புமிகு.உயர்நீதிமன்றத்தில் உரிமையியல் வழக்கு நிலுவையில் இருப்பதன் காரணமாக வழக்கினை தொடர்ந்து மேல் நடத்த மறுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

3.10. 2017, ஜனவரி 30 ம் தேதிய இப்பிரச்சனைக்குரிய தீர்ப்பில், நீதியராயம்

எதிர்மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டு மனுவினை அனுமதித்தும், 2016, நவம்பர் 2 ம் தேதியிட்ட தனித்தமர் நீதிபதியின் உத்தரவினை நீக்கரவும் செய்தது. சர்பாசி சட்டம் பிரிவு 34 ன் கீழ் உள்ள தடை ஒரு முழுமையான தடையல்ல என்றும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் மேல்முறையீட்டாளர் வழக்குச் சொத்தைக் காலி செய்திருப்பதாலும், ரூ.5,00,000/- இடமாறுதலுக்கான செலவுத்தொகையாக எதிர்மேல்முறையீட்டாளரிடமிருந்து பெற்றுக் கொண்டிருப்பதாலும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் விதிகளின் படி தனது கடப்பாட்டினை மேல்முறையீட்டாளர் நிராகரிக்க இயலாது என்று நீதியராயம் கருத்துரைத்துள்ளது. தரப்பினர்களின் உரிமைகளை இறுதியாக தீர்மானிக்கும் வரை வழக்குச் சொத்தை விற்பனை செய்வதிலிருந்து மேல்முறையீட்டாளருக்கு நீதியராயம் தடைவிதித்தது. எனவே, முதன்முதலில், 2013, ஜூலை 15 ம் தேதியன்று அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உத்தரவு, புதுப்பிக்கப்பட்டு உரிமையியல் வழக்கு முடிவடையும் வரை தொடருமாறு அறிவுறுத்தப்பட்டது. இதனால், மனக்குறையுற்று, தற்போதைய மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. மேல்முறையீட்டாளர் சார்பில் கற்றறிந்த மூத்த வழக்கறிஞர் ஸ்ரீ ஆஷிம் பானர்ஜியும், எதிர்மேல்முறையீட்டாளர் சார்பில் கற்றறிந்த வழக்கறிஞர் ஸ்ரீ கரண் பதுராவும் முன்னிலையாகக் கேட்டறிந்தோம்.

5. தனித்தமர்வு நீதிபதி அவர்கள் சரியான காரணங்கள் கூறி பிறப்பித்த நியாயமான உத்தரவை மாற்றியமைப்பதில் நீதியராயம் பெரும் தவறு செய்துள்ளதாக ஸ்ரீ பானர்ஜி

சமர்ப்பித்தார். தனித்தமர்வு நீதிபதி, அசல் வழக்கு ஊறுவிளைக்கக்கூடியதாக இருக்கக்கூடும் என்று கண்டறிந்து, அதனால் உரிமையியல் நடைமுறைச் சட்டம், 1908 (சுருக்கமாக "உநச") கட்டளைXXXIX விதிகள் 1 மற்றும் 2ன் கீழ் தன்விருப்புரிமை பரிகாரம் வழங்க மறுத்துவிட்டார் என்று சமர்ப்பிக்கப்பட்டது. எனவே, ஜனவரி 30, 2017 தேதியிட்ட பிரச்சனைக்குரிய தீர்ப்பு மற்றும் உத்தரவை ரத்து செய்யப்படவேண்டும் என்றும் நவம்பர் 2, 2016ம் தேதியிட்ட தனித்தமர்வு நீதிபதியின் உத்தரவு மீட்டெடுக்கப்பட வேண்டியது அவசியமானது என்றும் அவர் பணிந்து சமர்ப்பித்தார்.

6. மாறாக, ஸ்ரீ பதுரா, தனித்தமர்வு நீதிபதி, வெளியேற்றுகை வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்த விதிமுறைகளின் குறித்தவகை பரிகாரத்திற்காக அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதால், அவ்வழக்கு நிலைநிற்கத்தக்கது என்று கருதியுள்ளதால், முன்பு வழங்கப்பட்ட இடைக்கால நிவாரணத்தை ரத்து செய்ய இயலாது என்று சமர்ப்பித்தார்.

7. சந்தேகத்திற்கிடமின்றி, வழக்குச் சொத்து, மேல்முறையீட்டாளரான வங்கியிடம் அடைமானம் வைக்கப்பட்டுள்ளது. தனித்தமர்வு நீதிபதி கூறியுள்ளதுபோல், வழக்கும் இடைக்கால நிவாரண விண்ணப்பமும் புத்திசாலித்தனமாக வரைவு செய்யப்பட்டுள்ளது. பல்வேறு இடைக்கால பரிகாரங்கள் கோரப்பட்டிருந்தாலும் வேண்டுரை கூறு (d) ஐ குறிப்பிடுவது பொருத்தமானதாக இருக்கும், அது பின்வருமாறு:

"(d) கூறப்பட்ட வளாகத்தின் எண்.8, பழைய கோர்ட் ஹவுஸ் தெரு, கொல்கத்தா - 700001-ன் எந்த பகுதியையோ அல்லது குறிப்பிட்ட பகுதியையோ கையாளுதல் மற்றும்

/அல்லது அப்புறப்படுத்துதல் மற்றும்/அல்லது வில்லங்கம் ஏற்படுத்துதல் ஆகியவற்றிலிருந்து எதிர்மேல்முறையீட்டாளரைத் தடுக்கும் இடைக்கால தடை உத்தரவிடுதல் "

8. இதன்மூலம், எதிர்மேல்முறையீட்டாளரான இம்மேல்முறையீட்டாளரை வழக்குச் சொத்தின் ஒரு பகுதி அல்லது பகுதியையோ எந்த விதத்திலும் கையாள்வது மற்றும் / அல்லது அப்புறப்படுத்துவது மற்றும்/அல்லது வில்லங்கம் ஏற்படுத்துவதிலிருந்து தடுக்கும் ஒரு பொதுவான தடை உத்தரவு கோரப்பட்டிருப்பதைக் காணலாம்.

9. ஜூலை 15, 2013 தேதியிட்ட ஒரு இடைக்கால உத்தரவின் மூலம் தனித்தமர்வு நீதிபதி, பிரச்சனைக்குரிய வளாகத்தை விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க அனுமதித்தாலும், 6 வார காலத்திற்கு இறுதி விற்பனை உத்தரவுகளைப் பிறப்பிக்க முடியாது என்று உத்தரவிட்டார். மேற்படி இடைக்கால உத்தரவும் அவ்வப்போது தொடரப்பட்டு வந்துள்ளது. எனவே, மேற்படி இடைக்கால உத்தரவை ரத்து செய்வதற்கு G.A.No.2352/2014 ஐ தாக்கல் செய்ய மேல்முறையீட்டாளர் நிர்பந்திக்கப்பட்டார். நவம்பர் 2, 2016 ஆம் தேதியிட்ட தனித்தமர்வு நீதிபதியின் உத்தரவின் மூலம் மேற்படி இடைக்காலத்தடையும் நீக்கரவு செய்யப்பட்டது.

10. தனித்தமர்வு நீதிபதி, எதிர்மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்ட இடைக்கால நிவாரணத்தை ரத்து செய்யும் போது, சர்பாசி சட்டத்தின் 34 வது பிரிவைக் குறிப்பிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

11. நீதியராயம், தனது பிரச்சனைக்குரிய தீர்ப்பில், வங்கியானது, உத்தேசிக்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத் தீர்வின் அடிப்படையில் நடவடிக்கைகளை எடுத்திருப்பதால், அத்தீர்வுக்கு உட்பட்ட அதன் கடப்பாடுகளை அது நிராகரிக்க முடியாது என்று கருத்துரைத்துள்ளது. இருதரப்பினரின் உரிமைகளை நிர்ணயிக்கும் வரை, வழக்குச் சொத்தை விற்பதில் இருந்து வங்கியைத் தடுக்க வேண்டியது அவசியம் என்பதைக் கண்டறிவதற்காக, நீதியராயம் நம்பிக்கை முரண்தடை கோட்பாட்டைப் பயன்படுத்தியுள்ளது.

12. உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பை விலக்குவது இனி ஒருங்கிணைந்ததாக இல்லை. சர்பாசி சட்டத்தின் பிரிவு 34 இன் விதிகள், மார்டியா கெமிக்கல்ஸ் லிமிடெட் மற்றும் மற்றவர்கள் எதிர் யூனியன் ஆஃப் இந்தியா மற்றும் பிறர் (2004) 4 எஸ்.சி.சி 311 என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு மூலம் பரிசீலிக்கப்பட்டது. மேற்படி வழக்கில் இந்நீதிமன்றத்தின் பின்வரும் அவதானிப்புகளைக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

"50. பிரிவு 13 இன் உட்பிரிவு (4) ல் கொடுக்கப்பட்டுள்ளபடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட பின்னரே கடன் மீட்பு தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்ய முடியும் என்றும், கடன்களை மீட்டெடுக்கும் தீர்ப்பாயம் அல்லது மேல்முறையீட்டு தீர்ப்பாயம் தீர்மானிக்க அதிகாரம் பெற்றுள்ள எந்தவொரு நடவடிக்கையையும்

பொறுத்தவரையில், பிரிவு 34 தடைவிதித்துள்ளது என்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, பிரிவு 13 இன் உட்பிரிவு(4) இன் கீழ் எந்தவொரு செயலும் அல்லது நடவடிக்கையும் எடுக்கப்படுவதற்கு முன்பு, உரிமையியல் நீதிமன்றத்தை அணுகுவதற்கு எந்த தடையும் இருக்காது என்று எதிர்மேல்முறையீட்டாளர்களின் வழக்கறிஞர்களில் ஒருவரான திரு.சால்வே சமர்ப்பித்தார். எனவே, கடனாளிகளுக்கு பரிகாரம் இல்லை என்று கூறிவிட இயலாது. எவ்வாறாயினும், ஸ்ரீ சால்வே முன்வைத்த இந்த வாதம் சரியானதல்ல என்று நாங்கள் கண்டறிகிறோம். பிரிவு 34 ஐ முழுமையாகப் படித்தால், கடன் மீட்புத் தீர்ப்பாயம் அல்லது மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் ஆகியவை ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்ட அல்லது "இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கையையும்" தீர்மானிக்க அதிகாரம் பெற்றுள்ள விஷயங்களில் உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு தடை செய்யப்பட்டுள்ளது. அதாவது, பிரிவு 13 இன் உட்பிரிவு(4) இன்கீழ் அதை நோக்கி எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை என்றாலும், கடன் மீட்பு தீர்ப்பாயத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளக்கூடிய விஷயங்களைக் கூட தடை உள்ளடக்கியுள்ளது. தீர்ப்பாயத்திற்கு எடுத்துச் செல்லக்கூடிய ஒரு நடவடிக்கை தொடர்பாகவும், அதிகார வரம்பு தடை உள்ளது என்பது மேலும் கவனிக்கத்தக்கது. எனவே, எந்த ஒரு விஷயத்தைப் பொறுத்தமட்டில், அதன் பிறகும் நடவடிக்கை எடுக்கப்பட்டால் உரிமையியல் நீதிமன்றத்திற்கு அதன் எந்த வழக்கையும் நடத்துவதற்கு அதிகாரம் இல்லை. உரிமையியல் நீதிமன்றத்தின் தடையானது, பிரிவு 13 இன் உட்பிரிவு (4) இன் கீழ் ஏற்கனவே எடுக்கப்பட்ட

நடவடிக்கைகள் தவிர, கடன் மீட்பு தீர்ப்பாயத்தால் விசாரணைக்கு ஏற்கக்கூடிய அனைத்து விஷயங்களுக்கும் பொருந்தும்.

51. எவ்வாறாயினும், உரிமையியல் நீதிமன்றத்தின் மிகக் குறைந்த அளவிலான அதிகார வரம்பையும் செயல்படுத்த முடியும். உதாரணமாக, பிணைக் கடனாளியின் நடவடிக்கை மோசடியானது அல்லது அவரது கூற்று மிகவும் அபத்தமானது மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாததாக இருக்கும்போது இதற்கு எந்த விசாரணையும் தேவையில்லை அல்லது துல்லியமாக சொல்ல வேண்டுமெனில் ஆங்கில அடைமான வழக்குகளில் உரிமையியல் நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்க அனுமதிக்கப்படும் அளவிற்கு இருக்க வேண்டும். இத்தகைய நோக்கம் சென்னை உயர்நீதிமன்றத்தின் இரண்டு தீர்ப்புகளில் அங்கீகரிக்கப் பட்டுள்ளதைக் காண்கிறோம். அவை கற்றறிந்த மத்திய அரசு வழக்கறிஞர் மற்றும் இந்திய ஒன்றியத்திற்காக வி.நரசிம்மாச்சாரியார் ஆகியோரால் மிக முக்கியமாக சார்ந்து வாதிடப்பட்டது. [எ.ஐ.ஆர் 1995 மெட்ராஸ் 135], எ.ஐ.ஆர் பக்.141 மற்றும் 144-இல், கற்றறிந்த தனி நீதிபதியின் தீர்ப்பு,பத்தி22 இல் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது: (எ.ஐ.ஆர் ப. 143)

> "22 உரிமைகள், கடமைகள் மற்றும் கடப்பாடுகளை மீறும் வகையில் செயல்படும் அடைமானம் கொள்பவருக்கு எதிராக அடைமானம் வைப்பவரின் பரிகாரங்கள் தன்மையில் இரு மடங்கு ஆகும். அடைமானத்தின் விதிமுறைகளுக்கு மாறாக மோசடியான அல்லது முறையற்ற முறையில் விற்பனை அதிகாரம் பயன்படுத்தப்படுவதைக்

காட்டும் கூறுகள் இருந்தால் அடைமானம் வைத்திருப்பவர் விற்பனையைத் தடுத்து நிறுத்துவதற்கான தடை உத்தரவிற்காக விற்பனைக்கு முன் நீதிமன்றத்திற்கு வரலாம். ஆனால், அடைமானம் பெற்றவர் விற்பனை செய்வதைத் தடுக்கும் நடவடிக்கையில் ஒரு மோசடி அல்லது முறைகேட்டைத் தெளிவாக வெளிப்படுத்தி, அதன் அடிப்படையில் நிவாரணம் கோரப்படுகிறது என்று வழக்குரையில் கட்டாயம் சொல்லப்படவேண்டும். ஆடம்ஸ் எதிர் ஸ்காட் [(1859) 7 WR 213. 249] விற்பனை அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கான இந்த கட்டுப்பாடு, மேலே குறிப்பிட்டுள்ள வரையறுக்கப்பட்ட சூழ்நிலைகளில் மட்டுமே நீதிமன்றங்களால் பயன்படுத்தப்படும் என்பதை நான் சுட்டிக்காட்ட வேண்டியதில்லை, இல்லையெனில் அத்தகைய தடை உத்தரவை வழங்குவது இருதரப்பினராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட பத்திரத்தின் உட்பிரிவுகளில் ஒன்றை ரத்து செய்வது மற்றும் அடைமானத்தில் பணத்தை முன்வைக்கும் நபர்கள் நம்பியிருக்கும் முக்கிய பத்திரங்களில் ஒன்றை ரத்து செய்வதற்கு ஒப்பாகும். (கோஸ், ராஷ்பெஹாரி: அடைமானங்களின் சட்டம், தொகுதி. II. 4 வது பதிப்பு, பக்கம் 784 ஐ பார்க்கவும்)"

13. எந்த ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் " அல்லது அச்சட்டத்தில் அளித்துள்ள ஏதேனும் அதிகாரத்தின் படி எடுக்கப்படும்" என்று தீர்மானிப்பதற்கு ஒரு டிஆர்டி அல்லது மேல்முறையீட்டு தீர்ப்பாயத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்ட விஷயங்களில் உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு தடைசெய்யப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம்

கூறியிருப்பதைக் காணலாம். இந்த சட்டத்தின் கீழ் வழங்கப்படும் எந்த அதிகாரமும் பிரிவு 13 இன் உட்பிரிவு (4) இன் கீழ் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றாலும், டிஆர்டி-யால் விசாரிக்கக்கூடிய விஷயங்களைக் கூட தடை உள்ளடக்கியது என்று நீதிமன்றம் கூறியுள்ளது. சர்பாசி சட்டத்தின் தீர்ப்பாயத்திற்கு எடுத்துச் செல்லக்கூடிய ஒரு வழக்கைப் பொறுத்தமட்டில் அதிகார வரம்பு தடை உள்ளது என்று கூறப்பட்டுள்ளது. எந்தவொரு விஷயத்திலும் நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், உரிமையியல் நீதிமன்றத்திற்கு அதன் எந்த நடவடிக்கையையும் நடத்த அதிகாரம் இல்லை என்று திட்டவட்டமாக பகரப்பட்டுள்ளது. சர்பாசி சட்டத்தின் பிரிவு 13 இன் உட்பிரிவு (4) இன் கீழ் ஏற்கனவே எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தவிர, டிஆர்டி-யால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளக்கூடிய அனைத்து விஷயங்களுக்கும் உரிமையியல் நீதிமன்றத்தின் தடை பொருந்தும் என்று இந்நீதிமன்றம் தீர்ப்புரைத்துள்ளது.

14. இந்நீதிமன்றம் மேலும், உரிமையியல் நீதிமன்றத்தின் மிகக் குறைந்த அளவிலான அதிகார வரம்பையும் செயல்படுத்த முடியும் என்று கூறியுள்ளது. உதாரணமாக, பாதுகாக்கப்பட்ட கடனாளியின் நடவடிக்கை மோசடியானது அல்லது அவரது கூற்று மிகவும் அபத்தமானது மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாததாக இருக்கலாம், இதற்கு எந்த விசாரணையும் தேவையில்லை அல்லது துல்லியமாக சொல்லவேண்டுமெனில் ஆங்கில அடைமான வழக்குகளில் உரிமையியல் நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்க அனுமதிக்கப்படும் அளவிற்கு இருக்கவேண்டும்.

15. இவ்வழக்கில், பிணைக் கடனாளியின் நடவடிக்கை, அதாவது

மேல்முறையீட்டாளரின் நடவடிக்கை மோசடியானது அல்லது அதன் கூற்று மிகவும் அபத்தமானது அல்லது ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும் இதற்கு எந்த விசாரணையும் தேவையில்லை என்று கூறிவிட முடியாது. பிரிவு 17 மற்றும் 18 ன் விதிகளின் படி சர்பாசி சட்டமே பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு தீர்வுகளை வழங்குகிறது என்பது மேலும் கவனிக்கத்தக்கது.

16. இம்மேல்முறையீடு மற்றுமொரு காரணத்திற்காகவும் அனுமதிக்கப்படுவதற்கு தகுதியானது என்பதை நாங்கள் கருதுகிறோம். சந்தேகத்திற்கு இடமின்றி, ஈராயத்தால் செயல்படுத்தப்பட்ட அதிகார வரம்பு, உ.ந.ச இன் கட்டளை XLIII விதி 1ன் கீழ் செயல்படுத்தப்பட்ட அதிகார வரம்புக்கு ஒப்பானது. வாண்டர் லிமிடெட் மற்றும் மற்றொருவர் எதிர் ஆன்டாக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் [1990 (சப்) எஸ்.சி.சி 727] என்ற வழக்கில் இந்த நீதிமன்றத்தின் பின்வரும் அவதானிப்புகளைக் குறிப்பிடுவது பொருத்தமானதாக இருக்கும்:

> "14. தனித்தமர்வு நீதிபதியின் விருப்புரிமை அதிகாரப் பயன்பாட்டிற்கு எதிராக, நீதியராயத்தின் முன் மேல்முறையீடுகள் செய்யப்படுகின்றன. அத்தகைய மேல்முறையீடுகளில், மேல்முறையீட்டு நீதிமன்றம் முதல் நிலை நீதிமன்றத்தின் விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்துவதில் தலையிடாது மற்றும் அந்நீதிமன்றம் தன்விருப்புரிமை அதிகாரத்தை தன்னிச்சையாக, ஏறுமாறாக அல்லது நெறிபிறழ்ந்து செயல்பட்டதாகவோ அல்லது இடைக்கால தடை உத்தரவுகளை வழங்குதல் அல்லது மறுத்தல் ஆகியவற்றை நெறிமுறைப்படுத்தும்

நிலைநிறுத்தப்பட்ட சட்டத்தின் கொள்கைகளை அந்நீதிமன்றம் புறக்கணித்ததாகக் காட்டப்பட்டால் தவிர அதன் சொந்த விருப்பத்தை பதிலீடு செய்து மாற்றாது. விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு எதிரான மேல்முறையீடு கொள்கையளவில் மேல்முறையீடு என்று கூறப்படுகிறது. மேல்முறையீட்டு நீதிமன்றம் முக்கியப் பொருளை மறுபரிசீலனை செய்யாது மற்றும் அந்த நீதிமன்றத்தால் எட்டப்பட்ட முடிவு நியாயமான முறையில் முக்கியச் சான்றுகளின் அடிப்படையில் சாத்தியமானதாக இருந்தால், கீழமை நீதிமன்றத்தால் எட்டப்பட்ட முடிவை விட வேறுபட்ட முடிவை அடைய முயலாது. மேல்முறையீட்டு நீதிமன்றம் வழக்கின் விசாரணைக் கட்டத்தில் இந்த விஷயத்தை பரிசீலித்திருந்தால் அது ஒரு மாறுபட்ட முடிவுக்கு வந்திருக்கும் என்ற காரணத்திற்காக மட்டுமே மேல்முறையீட்டில் விருப்புரிமை அதிகாரத்தில் தலையிடுவது பொதுவாகவே நியாயப்படுத்தப்படாது. விசாரணை நீதிமன்றம் நியாயமான முறையில் மற்றும் நீதிமுறையில் தன் விருப்புரிமையைப் பயன்படுத்தியிருந்தால், மேல்முறையீட்டு நீதிமன்றம் வேறுபட்ட கருத்தை எடுத்திருக்கும் என்பதற்காக விசாரணை நீதிமன்றத்தின் தன் விருப்புரிமை அதிகாரப் பயன்பாட்டில் தலையிடுவதை நியாயப்படுத்தாது என்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கொள்கைகளைக் குறிப்பிட்டு, நீதியரசர் கஜேந்திரகட்கர், பிரிண்டர்ஸ் (மைசூர்) பிரைவேட் லிமிடெட் எதிர் வி.போத்தன் ஜோசப் [(1960) 3 SCR 713 : AIR 1960 SC 1156] : (SCR 721) என்ற வழக்கில்

".....இந்தக் கோட்பாடுகள் நன்கு நிறுவப்பட்டுள்ளன. ஆனால், சார்லஸ் ஓசென்டன் & கோ எதிர் ஜனாட்டனில் [1942 AC 130] விஸ்கவுண்ட்

சைமன் பின்வருமாறு கூறியுள்ளார் . ".....கீழே உள்ள ஒரு நீதிபதி தனது விருப்பத்தின் பேரில் பிறப்பித்த உத்தரவை மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் மாற்றியமைப்பதற்கான சட்டம் நன்கு நிறுவப்பட்டுள்ளது. மேலும், எழக்கூடிய எந்தவொரு சிரமமும் நன்கு நிறுவப்பட்ட கொள்கைகளைத் தனிப்பட்ட வழக்குகளில் பயன்படுத்துவதால் மட்டுமே ஏற்படுகின்றது".

மேல்முறையீட்டுத் தீர்ப்பு இந்தக் கோட்பாட்டிற்கு மாறானதாகத் தெரியவில்லை".

17. மேல்முறையீட்டு நீதிமன்றம், தன்னிச்சையாக அல்லது ஏறுமாறாக அல்லது நெறிபிறழ்ந்து செயல்பட்டதாக அல்லது இடைக்காலத் தடை உத்தரவுகளை வழங்குதல் அல்லது மறுத்தல் ஆகியவற்றை நெறிமுறைப்படுத்தும் நன்கு நிறுவப்பட்ட சட்டத்தின் கொள்கைகளை அந்நீதிமன்றம் புறக்கணித்ததாக காட்டப்பட்டால் தவிர முதல் நிலை நீதிமன்றத்தின் விருப்புரிமையைப் பயன்படுத்துவதில் தலையிடாது மற்றும் அதன் சொந்த விருப்பத்தைப் பதிலீடு செய்து மாற்றாது. விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு எதிரான மேல்முறையீடு கொள்கை அடிப்படையிலான மேல்முறையீடு என்று கூறப்படுகிறது. மேலும், மேல்முறையீட்டு நீதிமன்றம் சான்றுகளை மறுமதிப்பீடு செய்யாது, மேலும், அந்த நீதிமன்றத்தால் எட்டப்பட்ட முடிவு நியாயமான முறையில் முக்கியச் சான்றுகளின் அடிப்படையில் சாத்தியமானதாக இருந்தால், கீழமை நீதிமன்றத்தால் எட்டப்பட்ட முடிவை விட வேறுபட்ட முடிவை அடைய முற்படாது.

18. சந்தேகத்திற்கு இடமின்றி, இவ்வழக்கில், ஜூலை 15, 2013 தேதியிட்ட

இடைக்கால நிவாரணத்தை ரத்து செய்யும்போது, தனித்தமர்வு நீதிபதி, சர்பாசி சட்டம் பிரிவு 34 இன் விதிகளின் படி வாதியால் கோரப்பட்ட பரிகாரம் வழங்கப்பட்டிருக்க முடியாது என்று தீர்ப்பளித்துள்ளார். எனவே, சட்டரீதியான தடையின் அடிப்படையில் தனி நீதிபதி அவ்வுத்தரவைப் பிறப்பித்துள்ளார். மார்டியா கெமிக்கல்ஸ் லிமிடெட்(மேலே) என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தால் முன்பு பகர்ந்தபடி, ஒரு உரிமையியல் வழக்கு நிலைநிற்கத்தக்கதற்கான நோக்கம் மிகவும் குறுகியது. எதிர்மேல்முறையீட்டாளர் / வாதியின் வழக்கு மேற்குறிப்பிட்ட எல்லைக்குள் வராது. எனவே, தனித்தமர்வு நீதிபதியின் விருப்புரிமை அதிகாரத்தில் குறுக்கீடு செய்வதில் நீதியராயம் பெரும் தவறு செய்துள்ளதாக நாங்கள் கருதுகிறோம்.

19. முடிவில், இம்மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. உயர்நீதிமன்றத்தின் நீதியராயம் வழங்கிய ஜனவரி 30 , 2017 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவு நீக்கரவு செய்யப்பட்டு கற்றறிந்த தனித்தமர்வு நீதிபதி வழங்கிய தீர்ப்பு மற்றும் உத்தரவு உறுதி செய்யப்படுகிறது.

20. நிலுவையில் உள்ள விண்ணப்பம் (கள்) ஏதேனும் இருந்தால், அவை முடிக்கப்படுகிறது.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."